ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2131/60 - 2019 ජූලි මස 13 වැනි සෙනසුරාදා - 2019.07.13
*2131/60 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு யூலை மாதம் 13 ஆந் திகதி சனிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### அரசாங்க சேவை ஆணைக்குழு

*அரசியலமைப்பின் 57(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அதிகாரங்களைக் கையளித்தல்*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 57(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் 2017.10.30 ஆந் திகதிய 2043/13 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் திருத்தியமைக்கப்பட்ட 2017.04.11 ஆந் திகதிய 2014/3 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் செய்யப்பட்ட அதிகாரக் கையளிப்பு 2019.07.11 ஆந் திகதி முதல் செயல்படும் வண்ணம் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றது.*

**அட்டவணை "அ"**

| *நிரல் I*<br>*உத்தியோகத்தர் வகுதி* | *நிரல் II*<br>*அதிகாரங்கள் கையளிக்கப்படும் அரசாங்க உத்தியோகத்தர்கள்* | *நிரல் III*<br>*கையளிக்கப்படும் அதிகாரங்கள்* |
|---|---|---|
| 7. கல்வி விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரது அமைச்சின் கல்வி விடயத்தின் கீழ் வரக்கூடிய இலங்கை ஆசிரியர் சேவையின் ஆசிரியர்கள். | கல்வி விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளர். | I. அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட சேவைப் பிரமாணக் குறிப்புக்கு/ ஆட்சேர்ப்புத் திட்டத்துக்கு அமைவாக நியமனம் மற்றும் பதவி உயர்வு. |

**அட்டவணை "அ"** *(தொடர்ச்சி)*

| *நிரல் I*<br><br>*உத்தியோகத்தர் வகுதி* | *நிரல் II*<br><br>*அதிகாரங்கள் கையளிக்கப்படும் அரசாங்க உத்தியோகத்தர்கள்* | *நிரல் III*<br><br>*கையளிக்கப்படும் அதிகாரங்கள்* |
|---|---|---|
| | | II. ஓய்வூதியப் பிரமாணக் குறிப்பின் 2.17 ஆம் பிரிவின் கீழ் ஓய்வு பெறுவிக்கப்படுவதற்கு அனுமதியளித்தல் தவிர்ந்த ஏனைய அனைத்து ஓய்வு பெறுகைகளுக்கும் அனுமதி வழங்குதல். |
| | கல்வி விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளர்/ அமைச்சின் செயலாளரால் பெயர் குறிப்பிடப்பட்டு, அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அனுமதிக்கப்படும் மேலதிக செயலாளர் ஒருவர். | I. அரசாங்க சேவை ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நடவடிக்கைமுறைக்கு அமைவான வருடாந்த இடமாற்றங்கள் உள்ளிட்ட சகல இடமாற்றங்களும்.<br><br>II. அரசாங்க சேவை ஆணைக்குழு சுற்றறிக்கை இல. 3/ 2016 இன் பிரகாரம் வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சைகள் தொடர்பில் நிவாரணங்கள் வழங்குதல். |
| | கல்வி விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளர்/ அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அனுமதிக்கப்படும் மாகாண கல்விப் பணிப்பாளர்.<br><br>(மாகாணக் கல்விப் பணிப்பாளரினால் இந்த அதிகாரங்கள் நடைமுறைப் படுத்துவதற்கு முன்னர் அதற்கு அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அனுமதியை தனிப்பட்ட ரீதியில் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.) | I. ஒழுக்காற்றுக் கட்டுப்பாடும் பதவி நீக்கமும்.<br><br>II. அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அனுமதிக்கப்பட்டுள்ள இலங்கை ஆசிரிய சேவைப் பிரமாணக் குறிப்புக்கு உள்ளீர்ப்புச் செய்தல்.<br><br>III. அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அனுமதிக்கப்பட்டுள்ள இலங்கை ஆசிரிய சேவைப் பிரமாணக் குறிப்புக்கு அமைய பதவி உயர்வு வழங்குதல்.<br><br>IV. ஓய்வூதியப் பிரமாணக் குறிப்பின் 2.17 ஆம் பிரிவின் கீழ் ஓய்வு பெறுவிப்பதற்கு அனுமதி வழங்குதல். |

*அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அதிகாரம் கையளிக்கப்பட்ட 2017.04.11 ஆந் திகதிய 2014/ 3 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் ஏனைய விடயங்கள் மற்றும் அவற்றுக்கு அவ்வப்போது செய்யப்பட்டுள்ள திருத்தங்கள் மாற்றமின்றி தொடர்ந்தும் வலுவிலிருக்கும்.*

*அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளைப்படி,*

எம். ஏ. பி. தயா சென ரத்,
செயலாளர்,
*அரசாங்க சேவை ஆணைக்குழு.*

*அரசாங்க சேவை ஆணைக்குழு அலுவலகம்,*
*இல. 1200/09, இரஜமல்வத்தை வீதி,*
*பத்தரமுல்லை,*
*2019, யூலை 11.*

*07-977*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*